25th
SEPTEMBER
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 50 | பக்கங்கள் - 10 | editor.uthayam@gmail.com





## பாராளுமன்றம் கலைப்பு!

# ஒக்.4 முதல் 11 வரை வேட்பு மனுக்கள் ஏற்பு

### நவ.21 ல் புதிய பாராளுமன்றம் கூடும்!

05ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு இன்று உரை!

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின் முதற் தடவையாக இன்று (25) அனுர குமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு விஷேட உரை யாற்றவுள்ளார்.

இன்று இரவு 7.30 மணிக்கு இந்த உரை சகல இலத்திரனியல் ஊடகங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

## சவூதி தேசிய தின நிகழ்வில் பங்கேற்ற புதிய வெளிவிவகார அமைச்சர்



சவூதி அரேபிய தேசிய தின நிகழ்வுகள் சங்க்ரிலாவில் நேற்று நடைபெற்ற போது புதிதாக பதவியேற்ற வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பிரதம அதிதியாக பங்கேற்றார். நிகழ்வில் அவர் சவூதி அரேபிய தூதுவருடன் காணப்படுகிறார்.

## மத்திய கிழக்கில் முழு அளவில் யுத்தம் மூளும் அபாயம்

### இரு தரப்பிலும் கடும் தாக்குதல்

(எமது சிறப்பு நிருபர் எம்.என்.முஹம்மத்)

மத்திய கிழக்கில் பதற்றநிலை மிகவும் ஆபத்தான நிலையை அடைந்துள்ளது. குறிப்பாக லெபனானுக்கும் லெபனானிலுள்ள ஹிஸ்புல்லாக்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் மிக மிகக் கடுமையான மோதல்

05ம் பக்கம்பார்க்க...

## மாகாணங்களுக்கான ஆளுனர்கள் இன்று நியமனம்!

இலங்கையின் ஒன்பது

08ம் பக்கம்பார்க்க...

## பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவிப்பிரமாணம்



( ஐ. ஏ. காதிர் கான் )

இலங்கையின் பிரதமராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற

05ம் பக்கம்பார்க்க...

## மூவரை உள்ளடக்கிய மினி அமைச்சரவை



நேற்று பதவியேற்ற அமைச்சரவை விபரம்:

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க:

பாதுகாப்பு அமைச்சு, நிதி, முதலீட்டு

08ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில் வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

# நாட்டை கட்டியெழுப்ப அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை

## பதவியேற்பு நிகழ்வில் ஜனாதிபதி வேண்டுகோள்!










சங்கைக்குரிய மகாநாயக்க தேரர்களே, ஏனைய மத குருமார்களே, வெளிநாட்டு தூ துவர்களே, உயர்ஸ்தானிகர்களே, பிரதம நீதியரசரே, அழைப்பு விடுக்கப்பட்ட சிறப்பு அதிதிகளே, எமது நாட்டின் சனநாயகத்தின் மிக முக்கியமான பண்பு மக்களால் தம்மை ஆள்வதற்கான ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதே என்பது எங்களுக்கு தெரியும். எனினும் தோ□தலின்போது வாக்குகளை அளித்தல் மற்றும் ஆட்சியாளரை தெரிவு செய்து கொள்வதால் மாத்திரம் சனநாயகம் முற்றுப்பெற மாட்டாது. அது சனநாயகத்தின் ஓர் அடிப்படை அம்சமாக அமைந்த போதிலும் எமது நாட்டில் சனநாயகத்தை பலப்படுத்துவதற்காக கட்டமைப்புக்களின் பலம் பொருந்திய தன்மை அதைப்போலவே சட்டங்களின் பலம்வாய்ந்த தன்மை அவசியமென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே நான் முதலில் எமது நாட்டு மக்களுக்கு ஒரு விடயத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்நாட்டின் சனநாயகத்திற்காக எனது உச்சளவிலான அர்ப்பணிப்பினை எனது பதவிக்காலத்தில் வெளிக்காட்டுவேன். அதைப்போலவே எமது நாட்டில் தோ□தலொன்றின்போது, அதிகாரப் பரிமாற்றத்தின்போது அது சனநாயக ரீதியாக இடம் பெற்ற வரலாறு நிலவுகிறது.

ஒருபோதுமே தேர்தலொன்றின்போது இடம்பெறுகின்ற அதிகார பரிமாற்றத்தை எந்தவொரு தலைவரும் நிராகரித்ததில்லை. அதற்கிணங்க செயலாற்றி முன்னாள் சனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மக்களின் மக்கள் ஆணையை சுமுகமாக ஏற்றுக்கொண்டு இந்த சனநாயக ரீதியான அதிகாரப் பரிமாற்றத்திற்கான அவருடைய அர்ப்பணிப்பையும் முன்மாதிரியான தன்மையையும் வெளிக்காட்டியமைக்காக நன்றிக்கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதைப்போலவே எங்களுக்கு கிடைப்பது சவால்கள் நிறைந்த ஒரு நாடே என்பதை நாங்கள் மிகவும் ஆழமாக விளங்கிக் கொண்டிருக்கிறோம். எமது அரசியலில் இதைவிட பரிசுத்தமாக்கப்படவேண்டிய, மக்கள் பாரியளவில் எதிர்பார்க்கின்ற சாதகமான அரசியல் கலாச்சாரமொன்றின் தேவை நிலவுகிறது. நாங்கள் அதற்காக அர்ப்பணிப்பு செய்யத்தயார். எமது நாட்டின் அரசியல்வாதி மற்றும் அரசியல் பற்றி பிரஜைகள் மத்தியில் பாதகமான ஓர் அபிப்பிராயமே நிலவுகிறது. அது பொருத்தமற்ற ஒரு இடமென்ற கருத்தே நிலவுகிறது. எனவே நாங்கள் எமது பக்கத்தில் உச்சளவில் மீண்டும் அரசியல் பற்றியும் அரசியல்வாதி பற்றியும் மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்காக எமது தரப்பில் ஆற்றக்கூடிய பணிகளை ஆற்றத்தயார்.

அத்துடன் எங்களுக்கு கிடைக்கின்ற இந்த ஆழமான நெருக்கடியானது வெறுமனே ஓர் அரசாங்கம் அல்லது அரசியல் கட்சி அல்லது ஒரு தனிநபரால் மாத்திரம் கடந்து செல்லக்கூடிய நிலையில் இருப்பதாக நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் இதற்கு முன்னரும் நான் ஒரு மாயாஜால வித்தைக்காரன் அல்லவெனக் கூறியிருக்கிறேன். நான் ஒரு மெஜிக்காரனல்ல. நான் இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண பிரஜை. ஆற்றல்கள் இருக்கின்றன. ஆற்றாமைகளும் இருக்கின்றன. நாம் அறிந்த விடயங்களும் இருக்கின்றன. அறியாத விடயங்களும் இருக்கின்றன. ஆனால் என்னுடைய முதன்மைப்பணி ஆற்றல்களை உறிஞ்சி எடுத்து அறிந்தவற்றை ஒன்று திரட்டி மிகச் சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு இந்த நாட்டை நெறிப்படுத்துவதாகும். அதனால் அந்த கூட்டான இடையீட்டின் பங்காளியாவதே என்னுடைய பொறுப்பாகும். அதுபோலவே இந்த நெருக்கடியை நிறைவு செய்யும் போது அனைத்துத் துறைகளையும் சேர்ந்த பொதுப்பிரஜைகளுக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கிறது. அந்தப்பொறுப்பினை ஈடேற்றுவதற்காக நான் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கிறேன்.

ஆனால், நாட்டின் சனாதிபதி என்ற வகையில் என்னிடம் ஒரு தலையாய பொறுப்பு இருப்பதாக நான் நம்புவதோடு இந்த சவாலை வென்றெடுப்பதற்காக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாற்றுவதற்காக என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை நான் முறைப்படி ஈடேற்றுவேன் என்பதை இந்த சமூகத்திற்கு நிரூபித்துக் காட்டுவேன். அதைப்போலவே குறிப்பாக எங்களுக்கு தெரியும் எமது நாட்டுக்கு சர்வதேச ஒத்துழைப்பு அவசியமாகும். உலக நாடுகள் மத்தியில் எத்தகைய அதிகாரப்பிளவுகள் இருந்தாலும் நாங்கள் உலகில் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாடாக அமந்துவிட முடியாது. உலகத்துடன் கூட்டாக ஒருங்கிணைந்து பயணிக்கவேண்டும். அதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நாங்கள் ஒருபோதுமே தயங்கமாட்டோம்.

அதைப்போலவே எமது நாட்டை கட்டியெழுப்புகையில் கைத்தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர் முக்கியமானவர்களாக கருதப்படுவார்கள்.

எனவே, அவர்களை பலம்பொருந்தியவர்களாக கட்டியெழுப்ப அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவுவார்களென நாங்கள் நம்புகிறோம். இறுதியாக நான் கூறிவைக்க விரும்புவது எமது நாட்டின் சனநாயகத்தினால் நான் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். அவ்வாறு தெரிவு செய்துகொள்வதற்காக மக்கள் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். எனக்கு அளிக்கப்படாத வாக்குகளும் இருக்கின்றன. எனவே எமது வெற்றியின் உள்ளடக்கம் மற்றும் அளவு பற்றி எமக்கு சிறந்த புரிந்துணர்வு இருக்கின்றது. எனவே எமக்கு ஒத்துழைப்பு நல்காத, எம்மை நம்பாத பிரஜைகளின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்வதும் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதும் எனது ஆட்சிக்காலத்தில் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பாக அமைகின்றது. அந்த பணியை சரிவர ஈடேற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எதிர்காலத்தில் இவைனைத்துமே நடைமுறையில் சாத்தியமானதாக அமைகின்ற அனுபவத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக உங்களுடைய ஒத்துழைப்பினை பெரிதும் எதிர்பார்க்கிறேன். உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் நல்லாசியையும் கடவுளின் துணையையும் வேண்டிக்கொள்கிறேன்.

# புதிய ஜனாதிபதி அநுரவுக்கு ஜப்பான் தூதுவர் வாழ்த்து

**(ஐ. ஏ. காதிர் கான்)**

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்கவுக்கு, தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதில், அநுர குமார திஸாநாயக்கவுடன் இணைந்து பணியாற்ற அவர் எதிர்பார்த்துள்ளார்.

ஜப்பான் தூதுவர் மேலும் அவரது வாழ்த்துச் செய்தியில்,

“இலங்கை மக்கள், தமது தலைவரைத் தெரிவு செய்வதில் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டில் தீவிரமாகப் பங்குபற்றியமைக்காக நாம் வாழ்த்த விரும்புகின்றோம்.

அநுர குமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மக்களின் தலைமையிலான புதிய நிர்வாகத்துடன், பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைவதற்கும் எமது வலுவான உறவை அடைவதற்கும், ஜப்பான் அரசு தயாராக இருக்கும்.

இலங்கையிலும், ஜப்பானிலும் தலைவர்கள் மாறினாலும், எங்களுடைய நட்பு வலுப்பெற்றது என்பது வரலாறு. இலங்கையில் இம்முறை நடைபெற்று முடிந்த தேர்தல், கடந்த காலத்தைப் போலவே, புதிய பக்கங்களிலும் புதுப்பிக்கப்பட்ட நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் கதைகளால் நிரப்பப்படும் வகையில், எமது உறவின் பக்கம் திரும்பும் என்று நாங்கள் நம்புகிறோம்” என சுட்டிக் காட்டியுள்ளார்.

# இணைந்து செயற்படத் தயார்

## அமெரிக்க உயர் ஸ்தானிகர் அநுரவுக்கு வாழ்த்து



**(ஐ.ஏ. காதிர் கான்)**

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸ ாநாயக்கவிற்கு வாழ்த்துத் தெரிவித்து, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் செய்தி வெளியிட்டுள்ளார்.

“இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளை, அமைதியான முறையில் நடைமுறைப்படுத்தியமைக்காக நாம் வாழ்த்துகின்றோம்” என, அந்தச் செய்தியில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மேலும், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது செய்தியில்,

“வலுவான அமெரிக்க - ஶ்ரீலங்கா பங்காளித்துவத்தைப் பாராட்டுகின்றேன். பகிரப்பட்ட முன்னுரிமைகளில் ஒன்றாக இணைந்து செயல்படத் தயாராகவும் இருக்கின்றேன்” என்றும் தெரிவித்துள்ளார்.





மாணவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்தும் வகையில் கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 01 – தரம் 04 வரையிலான மாணவர்களின் சந்தை பாடசாலை வளாகத்தில் (24) இடம்பெற்ற போது...

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**



இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கை ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 SEPTEMBER 25 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# புதிய ஜனாதிபதியின் முன்னுள்ள பொறுப்பு

நாட்டின் ஒன்பதாவது நிர்வாக அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக பெரும்பான்மை சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களது ஆதரவுடன் தெரிவான ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இன்று பதவி ஏற்கவுள்ளார். அனுர குமார திசாநாயக்கவின் வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக பதிவாகிறது. 1948 இலிருந்து இந்நாட்டின் ஆட்சி பீடத்தை கைப்பற்றுவதற்கு இடதுசாரி தலைவர்கள் கண்ட கனவு இப்போதுதான் நனவாகி இருக்கிறது. சுதந்திரம் முதல் நடைபெற்று வந்த சகல தேர்தல்களிலும் இடதுசாரி கட்சிகள் மக்கள் ஆணையை பிரதிநிதித்துவப்படுத்த எடுத்த முயற்சி தமுத்தேகம கிராமத்தில் விவசாய குடும்பத்தில் இருந்து வந்த ஒருவரால் இயலுமாக இருந்திருக்கிறது. அரசியல் அரங்கில் 3 தசாப்தங்களுக்கு மேலாக இந்த பயணத்தில் அனுர குமார திசாநாயக்க உச்சக்கட்டத்தை அடைந்துள்ளார். முதலில் அனுர குமார திசாநாயக்க இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளமையை இட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனுரவுக்கு ஆட்சிப் பொறுப்பு கிடைத்திருக்கும் இக்காலம் நாடு பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ள ஒரு காலகட்டமாகும். பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நாட்டில் மக்கள் பெரும் சுமைகளை சுமந்து வருகின்றனர். இந்த நிலையில் மக்கள் ஆதரவு தெரிவிப்பதற்கு சம்பிரதாயபூர்வமான தலைவர்களை கைவிட்டு அனுர போன்ற ஒருவரை மக்கள் தெரிவு செய்ததற்கு இன்றுள்ள பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணமாக இருக்கிறது. அனுர குமார திசாநாயக்க தேர்தல் பிரச்சாரங்களில் அளித்த வாக்குறுதியை போன்று மக்களுடைய வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு உடனடியாக நிவாரணம் வழங்குவது புதிய ஜனாதிபதியின் பிரதான பொறுப்பு என பத்திரிகை சார்பில் நினைவுபடுத்துகிறோம்.

வீண் செலவுகளை குறைத்து வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கு புதிய ஜனாதிபதியும் அவரது அணியினரும் முயற்சிக்க வேண்டும்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திசாநாயக்க தனது ஒ தளத்தில்,

”பல நூற்றாண்டுகளாக நாம் வளர்த்து வந்த கனவு இறுதியாக நனவாகும். இந்த சாதனை எந்த ஒரு நபரின் உழைப்பின் விளைவு அல்ல, ஆனால் நூறாயிரக்கணக்கான உங்களின் கூட்டு முயற்சி. உங்கள் அர்ப்பணிப்பு எங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ளது, அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த வெற்றி நம் அனைவருக்கும் சொந்தமானது” என பதிவிட்டுள்ளார்.

மேலும் அந்தப் பதிவில் இந்த நோக்கத்திற்காக தங்கள் வியர்வையையும், கண்ணீரையும், தங்கள் வாழ்க்கையையும் கூட அர்ப்பணித்த பலரின் தியாகத்தால் எங்கள் பயணம் செதுக்கப்பட்டுள்ளது.

அவர்களின் தியாகங்கள் மறக்கப்படவில்லை. அவர்களின் நம்பிக்கைகள் மற்றும் போராட்டங்களின் செங்கோலை நாங்கள் தாங்குகிறோம், அது சுமக்கும் பொறுப்பை அறிந்தே. நம்பிக்கையினாலும் எதிர்பார்ப்பினாலும் நிரம்பிய கோடிக்கணக்கான கண்கள் எம்மை முன்னோக்கித் தள்ளுகின்றன, ஒன்றிணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுதத் தயாராக நிற்கிறோம்.இந்த கனவை புதிய தொடக்கத்தில் மட்டுமே நனவாக்க முடியும்.ஷ

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் அனைத்து இலங்கையர்களின் ஒற்றுமையே இந்தப் புதிய தொடக்கத்தின் அடித்தளமாகும்.

நாம் தேடும் புதிய மறுமலர்ச்சி இந்த பகிரப்பட்ட வலிமை மற்றும் பார்வையிலிருந்து எழும்.நாம் ஒன்றாக இணைந்து இந்த எதிர்காலத்தை வடிவமைப்போம்! எனவும் குறிப்பிட்டுள்ளார்

# ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பேராயர் மெல்கம் ரஞ்சித் உடன் சந்திப்பு



(ஐ. ஏ. காதிர் கான்)

பொரளை பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு, நேற்றுமுன்தினம் (23) சென்ற ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க, கர்த்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித்தை நேரில் சென்று சந்தித்து ஆசிகளைப் பெற்றார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த பேராயர், ”இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுர குமார திஸாநாயக்க அவர்களுக்கு, எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


இலங்கையில் மிகவும் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் பாரிய பொறுப்பை, நாட்டு மக்கள் அவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது ஒரு கடினமான பணியாக இருக்கலாம். அதற்காக, அவருக்கு முழு ஆதரவையும் ஆசிகளையும் வழங்குவோம் என்று உறுதியளிக்கின்றோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

“அத்துடன், நாட்டைக் கட்டியெழுப்ப எப்பொழுதும் தமது பூரண ஆதரவை வழங்கத் தயாராகவும் இருக்கிறேன்” என்றும், பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் மேலும் கூறியுள்ளார்.



ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் கொழும்பு தெஹிட்கஹ பள்ளிக்குச் சென்றார். அங்கு இடம்பெற்ற துஆ பிரார்த்தனையிலும் பங்கேற்றார். அங்கு அவருக்கு பள்ளி நிர்வாகத்தினரும் ஜமாஅத்தினர்களும் பெரு வரவேற்பளித்தனர்.



# பொதுத் தேர்தலை நடத்த 11 பில்லியன் ரூபா தேவை!

## ஜனாதிபதியே அதனைப் பொறுப்பேற்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் கருத்து!



"பாராளுமன்றம் கலைக்கப்படும் பட்சத்தில், கலைக்கப்பட்ட தினத்திலிருந்து இரு மாதங்களில் பொதுத் தேர்தலை நடத்தியாக வேண்டும். ஆனால், 2024ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் பொதுத் தேர்தலுக்காக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. அவ்வாறு தேர்தலை நடத்துவதென்றால் அதற்கு 11 பில்லியன் ரூபா தேவைப்படும். எனவே, பொதுத் தேர்தலின் நிதிச் செலவுக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்கவேண்டும்" என்று தேர்தல் ஆணை யாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் நேற்று (24) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"பாராளுமன்றத்தைக் கலைக்கும் தினத்திலிருந்து 52 66 நாட்களில் பொதுத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி செயலகம் வெளியிடும். அந்த வர்த்தமானி அறிவித்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் தினம், பொதுத் தேர்தலை நடத்தும் தினம் மற்றும் பாராளுமன்றம் மீண்டும் கூடும் தினம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த விடயங்கள் உள்ளடக்கிய வர்த்தமானி ஜனாதிபதியின் செயலாளர் கையொப்பத்துடன் வெளியானதுமே பொதுத் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்புகளை வெளியிட முடியும்.

தற்போது நடைமுறையிலுள்ள பாராளுமன்றம் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமே முழுமையாக இரத்துச் செய்யப்படும். அதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தல் தொடர்பில் எவ்வித நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ஒருவேளை ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களுக்கமைய பாராளுமன்றத்தை கலைப்பதென்றால், பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அறிவித்தலோடு அரசியலமைப்பின் 150(4) உறுப்புரையின் பிரகாரம் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை திறைசேரியிலிருந்து விடுவிப்பதற்கான அறிவிப்பையும் வெளியிட வேண்டும்.

பொதுத் தேர்தலுக்கான நிதி சிக்கல்கள் எதுவும் ஏற்படுமாக இருந்தால் அதற்கான முழு பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்க வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு தேவையான பணத்தை ஜனாதிபதியே பெற்றுக்கொடுக்க வேண்டும்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் பொதுத் தேர்தலுக்காக 11 பில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என்று சுட்டிக்காட்டியுள்ளோம்.

அதேபோன்று, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளார்கள். ஆனால், இவர்களில் ஒரு கோடியே 35 இலட்சத்து 19 ஆயிரத்து 916 பேரே வாக்களித்திருக்கிறார்கள். அதாவது, நூற்றுக்கு 79.46 சதவீமானவர்கள் வாக்களிப்பு செய்திருக்கிறார்கள். 2019ஆம் ஆண்டு 83.72 சதவீதமானவர்களும் 2015ஆம் ஆண்டு 82.51 சதவீதமானவர்களும் 2010ஆம் ஆண்டு 76.06 சதவீதமானவர்களும் வாக்களித்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்.

# ஜனாதிபதி அனுரவுக்கு சவூதி மன்னர் வாழ்த்து



இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய தேர்தல் வெற்றிக்கு சவுதி அரேபியாவின் முக்கிய தலைவர்கள் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் மற்றும் பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஆகியோர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளதாக சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சு 'ஓ' தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

"இரண்டு புனித மசூதிகளின் பாதுகாவலர் ளூ முபைபெளுயடஅயுெ மற்றும் உகூ பட்டத்து இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக அரசியலமைப்புப் பிரமாணம் செய்துகொண்ட அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்." என்று சவூதி வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### பாராளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க வர்த்தமானியில் கையெழுத்திட்டதை அடுத்து பாராளுமன்றம் நள்ளிரவில் கலைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பொதுத் தேர்தலை நடாத்துவதற்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடாத்தப்படவுள்ளதுடன் இதற்கான வேட்பு மனுக்கள் ஒக்டோபர் 4 முதல் 11 வரை ஏற்கப்படவுள்ளன. தேர்தல் நிறைவின் பின் புதிய பாராளுமன்றம் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி கூடவுள்ளது. தற்போதைய பாராளுமன்றம் 2025 ஆகஸ்ட் வரை தொடர்ந்திருக்க முடியும்.எனினும் ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.இக் கலைப்பின் காரணமாக தற்போதைய பாராளுமன்றத்திலுள்ள சகல உறுப்பினர்களும் நமது எம். பீ.பதவிகளை இழக்கவுள்ளனர்.

### பிரதமராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஹரினி அமரசூரிய சற்று முன்னர் ஜனாதிபதி அனுர குமார திஸ ாநாயக்க முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

25ஆண்டுகளின் பின் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்குப் பிறகு இலங்கையின் பெண் பிரதமர் என்ற பெருமையை ஹரிணி அமரசூரிய பெற்றுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஒரு கல்வியாளராவார். மனித உரிமை ஆர்வலர், பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும் அரசியல்வாதி என்று பலமுகங்களுடன் இவர் செயல்பட்டார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

2019ஆம் ஆண்டு முதல் இவரின் அரசியல் பிரவேசம் இருந்துவந்துள்ளது.

### மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லாக்களின் இராணுவத் தலைவர்களில் இருவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து, தொடரான இஸ்ரேலிய தென்லெபனான் மீதான ஏவுகணை மூலமும் வான்வழி மூலமுமே இத்தாக்குதல்கள் ஆரம்பித்தது. தற்போது ஹிஸ்புல்லாக்கள் இஸ்ரேலின் தெல் அவிவ் நகர் உட்பட அனைத்து நகரங்களையும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்துகின்றனர். இந்த தாக்குதல்களின் போது குறிப்பாக லெபனானில் 500க்கு மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான லெபனானியர்கள் காயமடைந்துள்ளனர்.

ஒருபுறம் சென்ற வாரம் பேஜன் மற்றும் ஐ போன் உட்பட பல இலத்திரனியல் சாதனங்களில் இஸ்ரேல் மிக நுணுக்கமான மின்காந்த அலைகளை உருவாக்கி பாரிய சேதத்தை லெபனானில் ஹிஸ்புல்லாக்களுக்கு விளைவித்தது. அதில் பலர் உயிரிழந்ததுடன் 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்டோரில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக ஈரானுக்கு இடமாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக் மற்றும் சிரியாவிலிருந்து இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் யெமன் ஒரு முழு அளவிலான தரைப்படைத் தாக்குதலுக்கு 6 இலட்சத்துக்கும் அதிகமான போர் வீரர்களை தயார்படுத்தி வைத்துள்ளதாக அறிவித்துள்ளதுடன் தாங்கள் எந்நேரத்திலும் போரை ஆரம்பிக்க தயார்நிலையில் இருப்பதாகவும் அறிவித்துள்ளனர். இஸ்ரேலிய இராணுவம் அநேகமாக தென் லெபனானிலிருந்து லெபனானிற்குள் நுழையும் வாய்ப்பு மிகவும் அதிகமாக காணப்படுகிறது. மேலதிக அமெரிக்கப்படைகள் மத்திய கிழக்கை நோக்கி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சற்றுமுன்பும் இஸ்ரேல் நடாத்திய மிகப்பயங்கர கொடிய தாக்குதலில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டுமிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமை தொடர்ந்தால் முழு அளவிலான ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேல் மோதல் ஒரு பிராந்தியத்திற்கான பாரிய மோதலுக்கான ஆரம்பமாக அமையும் என பலரும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன் தான் லெபனானிய மக்களோடு இருப்பதாக அறிவித்துள்ளார். மிகவும் இக்கட்டான இந்நிலைமையில் மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுவதற்கான எந்தவித வாய்ப்பும் இருப்பதாக தென்படவில்லை. எனவே பலரும் இது மிகவும் சிக்கலான மத்திய கிழக்கை உருவாக்கப்போகின்றது என்றும் குறிப்பாக அமெரிக்கத் தேர்தல் முடிவடைந்ததன் பின்பு இது வேறு வடிவங்களை எடுத்து சிக்கலான ஒரு நிலைமையை உருவாக்கி உலகளவில் பொருளாதார நெருக்கடியையும் அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக அரசியல் இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மறுபுறம் ஹமாஸ் தொடராக இடைவிடாது இஸ்ரேலிய இராணுவத்தை தாக்கி வருகின்றனர். இஸ்ரேலிய இராணுவத்திற்கு பலத்த இழப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவருகிறது.

ஆனால் இஸ்ரேல் காஸா மீதான தாக்குதல்களை ஓரளவுக்கு குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இப்போது அவர்களது முழுமையான கவனமும் தென்லெபனான் மீது காணப்படுவதோடு லெபனானின் தலைநகர் பீரூட்டின் மீதும் இடையிடையே தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.




# தரை போருக்கு தயாராகும் இஸ்லாமிய போர் குழுக்கள்...

# எல்லை மீறும் இஸ்ரேல்...!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

சர்வாதிகார ஆட்சியும் அதன் தலைமையும் உலகில் எந்தவொரு நாட்டிலும் அதிக காலம் ஆட்சி புரிந்த வரலாற்றை நாம் அனைவரும் காணவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும் காஸாவில் மனிதாபிமான மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்று ஹமாஸின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதல் வீரியம் 13 மீட்டர் அளவுக்கு ஆழமான பள்ளத்தை பூமியில் ஏற்படுத்தி இருக்கிறது என்றால் இந்த வெடிகுண்டின் தன்மை எப்படிபட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள அதிக காலம் தேவை இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் இப்போது துரிதமாக நடந்து வருகிறது. முகாமில் சில இடங்களில் சுமார் 9 மீட்டர் அதாவது 30 அடி வரை கூட பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதாகக் காசா அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் குறைந்தது 40 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 60 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த கொடூரமான தாக்குதலால் அகதிகளாக தங்கி இருந்த பலர் இஸ்ரேலிய ராணுவத்தால் இன கருவறுத்தலுக்கு தொடர்ந்து உள்ளாக்கப்படும் நிலை தொடருகிறது.

காஸாவில் உள்ள பயங்கரவாத அமைப்பு, இஸ்ரேல் மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு படைகள் மீது தாக்குதல் நடத்த பொதுமக்களையும், மனிதாபிமான உட் கட்டமைப்புகளையும் தொடர்ந்து தவறாக பயன்படுத்தி வருவதாகவும் இஸ்ரேல் பாதுகாப்பு படையின் செய்தி தொடர்பாளர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அப்படி என்றால் நாங்கள் பொதுமக்களை படுகொலை செய்வோம் என்று இஸ்ரேலிய ராணுவம் உலகிற்கு சொல்வதை உலகமும் கேட்டுக் கொண்டு மவுனம் காத்து நிற்கும் நிலையில் இதற்கான தீர்வு என்ன என்பதை யாரும் புரிந்து கொள்ள இயலாத சூழல் காணப்படுகிறது. அதேநேரத்தில் தாக்குதல் நடத்திய இடத்தில் ஹமாஸ் இயக்கத்தினர் இருந்தனர் என்ற இஸ்ரேலின் கூற்றை ஹமாஸ் மறுத்துள்ளது.மேலும் அது அப்பட்டமான பொய் என்றும் தெரிவித்துள்ளது.தங்களுது குழுவினர்கள் பொதுமக்களோடு இயங்கவில்லை எனவும் பொதுமக்கள் வாழும் இடங்களை தாங்கள் பயன்படுத்துவதில்லை எனவும் பலமுறை மறுத்திருப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

காஸாவில் இதுவரை 42,000 பேர் வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர் . 95000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள், குழந்தைகள் ஊனமுற்ற நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கே நாம் காணும் இந்த உலகம் நாகரீகமான உலகம் தானா என்கிற கேள்வி எழுகிறது. ஆனால் உண்மையில் பதில் இல்லை என்பதே கசப்பான உண்மையாக இருக்கிறது.

இஸ்ரேலிய அதிபர் பெஞ்சமின் நிதான்யாகு அடிப்படையில் நவீன காலத்தில் வாழும் ஹிட்லருக்கு இணையான ஒரு மோசமான அரசியல் வாதி என்பதை சர்வதேசம் இன்று நன்கு புரிந்து கொண்ட காரணத்தால் தான் இந்த நாசாகார சக்திக்கு அமெரிக்கா வை தவிர வேறு எந்த தேசமும் ஆதரவை நல்கவில்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் இந்தியாவின் இந்து தேசிய வலதுசாரி மோடி அரசு இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுதங்களை சப்ளை செய்து வருவதையும் நாம் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதே சமயம் இது போன்ற ஒரு அவமானகரமான செயலை செய்து தனது சொந்த மக்களின் பகைமையும், வெறுப்பையும் சந்திக்கும் அளவுக்கு பெஞ்சமின் நிதான்யாகு வின் மரியாதை அடிபாதாள நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது என்பதை இன்று உலகம் கண்டு வருவதை தான் நாம் அனைவரும் புரிந்து கொள்ள முடிகிறது.

ஹமாஸ் இயக்கத்தின் போராளிகளை பயங்கரவாதி என்று கூறும் யூத சியோனிச அரசும் அதன் தலைமையும் உலகின் மிகப்பெரிய அளவிலான பயங்கரவாத சக்திகள் என்பதை உலகம் முழுவதும் கூறும் அளவுக்கு நிலைமை சென்று விட்டது. ஆனாலும் உலக வரலாற்றில் எந்தவொரு சர்வாதிகாரியும் மனம் திருந்திய வரலாறு இல்லை என்பதை பெஞ்சமின் நிதான்யாகு உலகிற்கு மீண்டும்,மீண்டும் பறை சாற்றி கொண்டு வருவதை நாம் காண கூடியதாக உள்ளது. ஒரு வேளை சர்வாதிகார தலைமையிலான அரசின் வரலாற்றை அவர் அறிந்து கொள்ளவில்லை என்பதை தான் நாம் அவரின் செயல்பாட்டின் ஊடாக அறிந்து கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் பாலஸ்தீன பிரதேசத்தை எந்தவொரு நிலையிலும் வெற்றி கொள்ள முடியாது என்று இஸ்ரேல் நாட்டின் ராணு ஜாம்பவான்கள் மற்றும் அரசியல், ராணுவ தலைவர்கள் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள். இருப்பினும் பெஞ்சமின் நிதான்யாகு மற்றும் தீவிர வலதுசாரி சியோனிச அமைப்பின் தலைவர் பென் கேவிர் ஆகிய இரண்டு பேரும் தான் இந்த போரைத் தொடர்ந்து நடத்துவதில் மிகவும் கவனம் செலுத்தி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. அதற்கு காரணம் அரசியல் லாபம் என்கிற கருத்தை தான் முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் யாஹூது ஒம்லர்ட் தெரிவித்துள்ளார்.அவரது கருத்து அடிப்படையில் இஸ்ரேலிய அரசு நாட்டில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி விட்ட நிலையில் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

அதே சமயம் , இஸ்ரேலிய முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் பிரிக் இதேபோல் வலிமையான கருத்தை பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு எதிராக பதிவு செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது. இதேபோல் பல்வேறு அரசியல் தலைவர்கள் குறிப்பாக இஸ்ரேலிய எதிர் கட்சி தலைவர் யாயிர் லாயிர் இதே போல் கருத்தை தெரிவித்து உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் எந்தவொரு நிலையிலும் யாருடைய கருத்தையும் ஏற்றுக் கொள்ள முன்வராத பெஞ்சமின் நிதான்யாகு தொடர்ந்து போர் முழுக்கத்துடன் காசா மற்றும் மேற்கு கரையில் அகதிகள் முகாமில் வாழ்ந்து வருகின்ற அப்பாவி பொதுமக்களை குறி வைத்து படுகொலை செய்து வருகிறார்.

இந்த போர் எப்போது நிறைவு பெறும் என்று நாம் உறுதியாக கூற முடியாத அளவுக்கு நிலைமை படு மோசமான நிலையை அடைந்து வருவதைக் காண முடிகிறது. அடுத்த மாதம் ஒரு ஆண்டை நிறைவு பெறும் நிலையில் இந்த போர் தற்போது சென்று கொண்டு இருக்கிறது. இருப்பினும் போர் ஆரம்பித்து சில நாட்களில் காசா பகுதி முழுமையாக தனது கட்டுக்குள் கொண்டு வந்து விடுவதாக கூறி நாசாகர ஆயுதங்களை ஒரு சிறிய நில பரப்பில் மீது வரைமுறை இல்லாமல் பயன்படுத்திய நிலையில் கூட இஸ்ரேலிய ராணுவம் வெற்றி பெற முடியாத துரதிர்ஷ்டவசமான நிலையை அடைந்து வருவதைக் காண முடிகிறது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய பொதுமக்கள், சர்வதேச நாடுகள், போர் முனையில் ஈடுபட்டு வரும் ராணுவம், ராணுவ துறை சார்ந்த முன்னாள் மற்றும் தற்போதைய ஜெனரல்கள் அனைவரும் குறிப்பாக அமெரிக்க உளவுத்துறை வரை இந்த போரில் பெஞ்சமின் நிதான்யாகு தலைமையிலான போர் ராணுவம் வெற்றி பெற சாத்தியமே இல்லை என்று கூறிய நிலையிலும் சர்வாதிகாரி பெஞ்சமின் நிதான்யாகு எந்தவொரு நம்பிக்கையில் இந்த போரை தொடர்ந்து நடத்த முயற்சி செய்து வருகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது.

இஸ்ரேல் தற்போதைய நிலையில் அதன் வெற்றியை அவர்களே மெச்சிய நிலையில் வரும் காலங்களில் அவர்கள் மிகப்பெரிய அளவில் ஆன ஆபத்தில் இருந்து வருவதை நாம் தெளிவாக அவதானிக்க கூடியதாக இருக்கிறது. இந்த ஆபத்தை சர்வதேச நாடுகள் உணர்ந்து இருக்கும் காரணத்தால் தான் உடனடியாக போர் நிறுத்தம் தேவை என்கிற குரல்கள் வலுவான நிலையில் எழுந்துள்ளது. ஆனாலும், பெஞ்சமின் நிதான்யாகு எதனையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். இதனை உணர்ந்து கொண்ட காரணத்தால் தான் சர்வதேச நாடுகளில் வாழும் யூதர்கள் மிகவும் அச்சப்படுகின்றனர். இந்த அச்சத்தை உணர்ந்த நிலையில் தான் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய பொதுமக்கள் அதாவது இரட்டை குடியுரிமை வைத்து இருப்பவர்கள் நாட்டில் இருந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது. லெபனான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இஸ்ரேலிய வடக்கு பகுதியில் வசிக்கும் பல இலட்சக்கணக்கான யூத மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து நாட்டின் மத்திய பகுதியில் குடியேறிய நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக சொந்த நாட்டில் வாழும் நிலை அந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இஸ்ரேல் நாட்டின் பல்வேறு ஹோட்டல்களில் தஞ்சம் அடைந்த பொதுமக்கள் தங்களை முழுமையாக தங்கள் பகுதிகளில் குடியமர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இஸ்ரேல் நாட்டின் பல பகுதிகளில் பதட்டம் தொற்றிக் கொண்டது என்பதே உண்மையாகும். ஆகவே தான் 5,00000 மேற்பட்ட இஸ்ரேலிய பொதுமக்கள் டெல் அவிவ் நகரில் கூடி போருக்கு எதிரான வலிமை வாய்ந்த தங்கள் கருத்தை தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையில் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ், ஹொதிக்கள் மற்றும் இஸ்லாமிய ஆய்த ஜிகாதிய குழுக்கள் இஸ்ரேல் நாட்டை எதிர்த்து கடுமையாக போரிட்டு வருகின்றனர். இதன் விளைவாக அமெரிக்கா மத்திய தரைக்கடல் பகுதியை விட்டு முழுமையாக வெளியேறி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவின் நாசகார ஆயுதங்களை தாங்கிய கப்பல்கள் மீண்டும் அமெரிக்காவுக்கு திரும்பி சென்று கொண்டு இருப்பதை நாம் காண முடிகிறது.

மிகவும் முக்கியமான காரணியாக இருப்பது என்னவென்றால் இஸ்ரேலிய எதிரிகளான இஸ்லாமிக் இணைவு கூட்டணி வலிமை வாய்ந்த நிலையில் போரிடுவது மிகவும் முக்கியமான காரணியாக உள்ளது. இஸ்ரேல் ராணுவம் தரை வழி போரில் ஈடுபட்டால் மிகவும் அதிகமான உயிரிழப்புகளை சந்திக்கும் என்கிற நிலை தற்போது காணப்படுகிறது. காசாவில் அவர்களால் 11 மாதங்களாக வெற்றி பெற முடியாத நிலைக்கு மூல காரணமாக இருப்பது சுரங்க பாதைகள் தான் என்பதை நாம் காண கூடியதாக இருக்கிறது. 700 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படும் இந்த சுரங்க பாதைகள் எங்கே ஆரம்பித்து எங்கே முடிகிறது என்பதை யாராலும் அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு சிக்கலான வலை பின்னல் வலைப்பாதையாக இருக்கிறது. இந்த சுரங்க பாதைகள் 1968 ம் ஆண்டு போருக்கு பின்னர் தான் வடிவமைப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சில சுரங்க பாதைகளை அடையாளம் கண்டு கொண்ட (ஐனுக யுசஅல) உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்த முயன்று பிணமாக வெளியே தள்ள பட்டதை நாம் காண முடிகிறது. அதேநேரத்தில் காசாவின் விதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டு வரும் இஸ்ரேலிய மெக்கோவா டாங்கிகள் ஆர் பி ஜி செல் மூலம் தாக்கப்பட்டு வெடித்து சிதறும் காட்சிகளை ஹமாஸின் ராணுவ பிரிவான அல் குத்ஸ் படை பிரிவு சர்வதேச நாடுகள் பார்வைக்கு தொடர்ந்து அனுப்பி வருகிற காட்சிகளையும் காண முடிகிறது.

இதே போல் லெபனானில் இருந்து போரிடும்
ஷியா பிரிவு படையான ஹமாஸ் இயக்கம் தலைவர் ஹசன் நஸ்ருல்லாஹ்வின் வழி காட்டுதலை பின்பற்றி போரிட்டு வருகின்றது. இதுவரையில் 1500 க்கு மேற்பட்ட ஏவுகணைகளை தொடர்ந்து இஸ்ரேலிய நாட்டின் வட பகுதிகள் மற்றும் டெலிகாம் உயர் கோபுரங்களை தாக்கி பெரும் தேசத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் எந்தவொரு நிலையிலும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் செயல்பாட்டை தடுத்து நிறுத்த சக்தி அற்ற நிலையில் கைசேதப்பட்டு நிற்கின்ற நிலையை நாம் காணலாம். ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தொடர் ஏவுகணை தாக்குதலை ஒரு கட்டத்தில் சமாளிக்க முடியாமல் உலகின் மிகப்பெரிய அளவிலான வான் பாதுகாப்பு சாதனமாக இஸ்ரேலிய ஐயன் டோர்ம் முற்றிலுமாக செயல் இழந்து தவிக்கும் நிலை காணப்படுகிறது. அதாவது ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தொடர் ஏவுகணை தாக்குதலால் ஐயன் டோர்ம் வான் பாதுகாப்பு சாதனங்கள் குழம்பி போய் இடைமறிப்பதை கை விட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் ஹிஸ்புல்லாஹ் க்கள் ஏவிய ஏவுகணைகள் தெளிவான இலக்குகளை துல்லியமான முறையில் தாக்கி பலர் கொல்லப்படுவதற்கு காரணமாக அமைந்து உள்ளது என்பதே தற்போதைய நிலவரமாக இருக்கிறது. இந்த ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தாக்குதல் பொதுமக்களை குறி வைத்து தாக்காமல் ராணுவ நிலைகளை மட்டுமே குறி வைத்து தாக்கப்படும் நிலையில் பல நூற்றுக்கணக்கான ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது. ஆனாலும், யூத சியோனிசம் அரசின் மீடியாக்களில் இது குறித்து எந்தவொரு செய்தியையும் வெளியிட தடை விதிக்கப்பட்ட நிலையில் உண்மையை வெளிப்படுத்த அவர்கள் மறுத்து வருவதே உண்மையாகும். இது வரையிலான போரில் இஸ்ரேலிய ராணுவம் பல்லாயிரக்கணக்கான வீரர்களை இழந்து விட்டதாகவே தெரிகிறது. அதேநேரத்தில் பல்லாயிரக்கணக்கான ராணுவ வீரர்கள் பலத்த காயமடைந்து தங்கள் உடல் உறுப்புகள் செயலிழப்பு ஏற்பட்டு ஊனமுற்றவர்களாக மாறா விட்டனர்.

இதற்கிடையில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் யஹ்யா சின்வார் தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைமைக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு இருப்பதாக கூறியுள்ளார். தங்கள் நாடு ஜெருசலம் மற்றும் புனித அல் அக்ஸா பள்ளிவாசலை மீட்கும் வரை போராடப் போவதாக தெரிவித்து உள்ளார். அதேநேரத்தில் வலிமையான இஸ்லாமிய கூட்டு படைகள் அனைத்தும் ஒன்றிணைந்து போராடப் போவதாக கூறி நிலையில் மரித்து போன ஜிகாதிகள் இஸ்மாயில் ஹனியா மற்றும் பல்வேறு தியாகிகளின் தியாகத்தை போற்றும் வகையில் நினைவு கூர்ந்துள்ளார். அடுத்த நிலையில் புதிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் அணைத்து இஸ்லாமிய புரட்சிகர குழுக்கள் ஒருங்கிணைந்த தரை வழி போரை தொடங்கும் வகையில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. ஒரு வேளை இது போன்ற தாக்குதலை அதாவது பலமுனை தொடர் தாக்குதலுக்கு இஸ்ரேலிய நாடு உள்ளாகும் போது பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு



தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

# புதிய ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வாழ்த்து

தேர்தலில் இலங்கை மக்கள் தமது திடவுறுதியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அவரது சகாக்கள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தேசப்பற்றுடன் ஜனநாயகத்தின் உண்மையான உணர்வோடு இந்த வெற்றியை நாங்கள் நிலைநிறுத்துவோமாக.

நமது தேசத்தின் இதுகாறும் தீர்க்கப்படாத முரண்பாடுகளை நிவர்த்தி செய்யவதற்கான ஒளி இப்போது புதிய அணியினர் ஊடாகப் பாய்ச்சப்படுகின்றது. நாட்டின் அரசியலில் ஒரு புதிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம், பல சவால்களை எதிர்கொள்வதற்கான திராணியை வளர்த்துக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய இச்சந்தர்ப்பத்தில், பிராந்தியத்துடனும், சர்வதேசத்துடனும் சமாதானத்திற்காக ஒத்துழைக்கும் தோழமையை அனைத்து இலங்கையர்களும் வரிந்து கொள்வோமாக.



இதே வேளையில், நாம் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் கௌரவ சஜித் பிரேமதாசவுக்கும் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்கள் மீது நம்பிக்கை வைத்து, தங்களுடைய காலத்தையும் நேரத்தை அர்ப்பணித்து, பெறுமதியான வாக்குரிமையைப் பயன்படுத்திய சகல சமூகங்களையும் சேர்ந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

---

ஜனாதிபதி பதவியேற்பு:

# மடகஸ்கரில் இலங்கையர்கள் சிற்றுண்டி உண்டு மகிழ்ச்சி



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அனுர குமார திசானாயக பதவியேற்றதையடுத்துவெளி நாடுகளில் உள்ள இலங்கையர்களும் அதன் மகிழ்ச்சியை கொண்டாடி வருகின்றனர்.

மடகஸ்கரில் இரத்தினக்கல் வியா பாரத்துக்காக சென்றுள்ள இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அங்கு பாற்சோறு மற்றும் சிற்றூண்டிகளை உண்டும் பகிர்ந்தும் கொண்டாடியுள்ளனர்.

அங்கு இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மொகமட் அம்மார் அஸ்லம் தலைமையிலான இளம் வர்த்தகர்கள் பாற்சோறு சிற்றுண்டிகள் வழங்கி இந்த மகிழ்ச்சியை கொண்டாடியுள்ளனர்.

---

# இந்த தேசத்தின் கடைசி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை இலங்கை மக்கள் தெரிவு செய்துள்ளனர்

## சுனில் ஹந்துன்நெத்தி



(ஐ. ஏ. காதிர் கான்)

"தேசத்தின் கடைசி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை, இலங்கை மக்கள் தெரிவு செய்துள்ளனர்" என்று, தேசிய மக்கள் சக்தியின் (NPP) அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் (23) மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி,

"இந்த ஜனாதிபதி பதவிக்குப் பின்னர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நாடு காணாது" என உறுதியளித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சுனில் ஹந்துன்நெத்தி, "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் ஜனாதிபதி ஒருவரே, தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நோக்கத்திற்காக பொதுமக்கள் தங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படும். அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

இது ஆரம்பம்தான். பிரஜைகளின் அங்கீகாரத்துடனும் உதவியுடனும் இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

---

# ஜனாதிபதியின் செயலாளராக நந்திக்க குமாநாயக்க நியமனம்

(ஐ. ஏ. காதிர் கான்)

ஜனாதிபதியின் செயலாளராக சனத் நந்திக்க குமாநாயக்கவை, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

சனத் நந்திக்க குமாநாயக்க, களனிப் பல்கலைக் கழக பட்டதாரி ஆவார்.



---

# ஆயிஷா ஜுனைதீன் காலமானார்

பிரபல ஒலி, ஒளிபரப்பாளர் (வானொலி, ரூபவாஹினி) ஆயிஷா ஜுனைதீன் இறையடி சேர்ந்தார்.

அவரது ஜனாஸா, தற்போது கொலன்னாவை, நாகஹமுல்ல (128/2, Nagahamull Road›,Kolonnawa) 128/02 ஆம் இலக்க இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

கொழும்பு குப்பியாவத்தை மையவாடியில் (23/09/2024) அஸர் தொழுகையின் பின், ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

---

# இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரவிற்கு சீன ஜனாதிபதி வாழ்த்து

(ஐ. ஏ. காதிர் கான் )

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுர குமார திஸ ாநாயக்கவிற்கு, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.



சீன ஜனாதிபதி தனது வாழ்த்து அறிக்கையில்,

"சீன அரசாங்கத்தின் சார்பிலும், மக்களின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையும் சீனாவும், பாரம்பரிய நட்பு அயல் நாடுகள். இரு நாடுகளும் இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில், இரு நாடுகளும் பரஸ்பரம் மற்றும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

இதன் மூலம், இரு நாடுகளும் நட்புறவுமிக்க, சகவாழ்வு மற்றும் வேவ்வேறு அளவிலான நாடுகளிடையிலான பரஸ்பரம் நன்மையளிக்கக் கூடிய ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான சிறந்த உதாரணங்களாகும்.

நான், இலங்கை - சீன உறவுகளுக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்குகின்றேன். உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய நட்புறவுப்பாதைத் திட்டத்தில் வெற்றிகரமான விடயங்களைச் சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன்" என்று, மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

---

### மாகாணங்களுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கான ஆளுனர்கள் இன்று நியமிக்கப் படவுள்ளனர்.

அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெ ளியாகியுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநராக நிர்வாக சேவை அதிகாரி யொருவரையும் வடமாகாண ஆளுநராக முன்னாள் யாழ் அரச அதிபரொருவரையும் நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றன.

---

# அநுரவின் வெற்றி நாட்டு மக்களின் அபிலாஷைகளின் பிரதிபலிப்பு!

## றிஷாட் எம்.பி. புகழாரம்

(ஐ. ஏ. காதிர் கான்)

"அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றி, நாட்டு மக்களின் அபிலாஷை களைப் பிரதிபலிக்கும்" என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் சுட்டிக் காட்டியிருக்கிறார். "ஒருமைப்பாட்டையும், அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதன் ஊடாக, மக்கள் வழங்கிய ஆணையை அவர் ஈடேற்றுவார்" என, தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.



"நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலின் முதலாவது வாக்குகள் எண்ணப்பட்டு வெளியான முடிவுகளின் பிரகாரம், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுர குமார திஸ ாநாயக்க முன்னிலையிலிருந்த வேளையில், அவரது வெற்றிக்கு வாழ்த்துக் கூறி, தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவொன்றைச் செய்த றிஷாட் பதியுதீன், அப்பதிவில்,

"இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்துக்கள். இந்த வெற்றி, நாட்டு மக்களின் அபிலாஷை களின் வெளிப்பாடாகும். நாட்டு மக்களுக்கு இடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதுடன், அபிவிருத்தியை ஊக்குவிப்பதன் ஊடாக மக்கள் உங்களுக்கு வழங்கிய ஆணையை, உரியவாறு ஈடேற்றுவீர்கள் என நாம் நம்புகின்றோம்.

உங்களது வெற்றிக்கும், நீங்கள் அளிக்கவிருக்கும் தலைமைத்துவத்திற்கும் வாழ்த்துக்கள்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.




நாச்சியாதீவு பர்வீன்

# புனைகதையுலகில் பொழிந்த புதுப்புனல்

## – 'தண்பதப் பெருவழி' –

**- புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்-**

ஈழத்துப் பெண் பிரமாக்களுள் அதி கூடிய பனுவல்களை அறுவடை செய்தவர் என்ற பெருமைக்குரியவர் கோகிலா மகேந்திரன்.சிறுகதை, நாவல், குறுநாவல், சிறுவர் இலக்கியம்,கவிதை, திறனாய்வுக் கட்டுரைகள்,நாடகங்கள், உளவியல் கட்டுரைத் தொடர்கள் எனத் தானீடுபட்ட அகண்ட தளத்தினின்றும் இந்த நிமிடம் வரை நாற்பத்து நான்கு (44) நூல்களை இவர் அறுவடை செய்துள்ளார். இவை தவிர தனது சகாக்களை ஊக்குவிக்கு முகமாகவும் சில பனுவல்களைத் தொகுத்தும் இவர் வெளிக்கொணர்ந்துள்ளார். இந்த வகையில் 1984இல் இரத்தினவேலோனின் கதைகளுடன் தன் கதைகளையுஞ் சேர்த்து இவர் பதிப்பித்த 'அறிமுக விழா' மிக முக்கியமானது,பலராலும் கொண்டாடப் பட்டது.

1980களில் ஒன்பது பெண் எழுத்தாளர்கள் ஒன்றித்து எழுதிய 'திருப்பங்கள்' குறுநாவலையும் கடந்த ஆண்டில் நூலாக்கினார்.இதன் ஒரு தொடர்ச்சியாக சீர்மிய வளவாளராய் நின்று தானியக்கி வரும் 'சோலைக்குயில்' மாடத்தில் பாடம் பயின்ற, மற்றும் அதனுடன் அணுக்கமாயுள்ள21 எழுத்தாளர்களது சிறுகதைகளுடன் தனதோர் கதையினையுஞ் சேர்த்து 22 கதைகளாகத் தொகுத்து 'தண்பதப் பெருவழி' எனும் மகுடத்தில் தற்போது புதுப்புனலாகப் பொழிய வைத்துள்ளார்.

புதுப்புனலின் முதற் பெருந் துளியாக 'வைரஸ் ஒன்றின் வாக்குமூலம்' எனும் தனது 'சிரித்திரன்' சிறுகதையினைப் பொழிந்துள்ளார் நூலின் தொகுப்பாசிரியர் கோகிலா மகேந்திரன். அறிவியலை புனைகதைக்குள் உள்வாங்கி எழுதுதல் ஈழத்தில் அரிதாய் நிகழ்வதொன்று! வைரஸ்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் வடிவம், தொழிற்பாடுகள் பற்றி அங்கதச் சுவையுடன் கதாசிரியை வெகு விஸ்தாரமாகவே கதையில் பிரஸ்தாபித்துள்ளார்.

கட்டுரைக்குரிய கருப்பொருளை கோகிலா கதையாக்கிய முறைமை மிக அற்புதமாகவுள்ளது, ஆணி அடித்தது போல் நெஞ்சில் பதிய வைத்திருக்கிறது. தூக்கலானதோர் ஆரம்பத்துடனேயே நூலானது தனது 144 பக்கங்களையும் விரித்திருக்கிறது! மிகத் தெளிவான, இதமான எழுத்துருக்களுடன் வெகு கச்சிதமாகவே பரணீதரனின் பதிப்பகம் இந் நூலைப் பதிப்பித்திருக்கிறது.

பாகீரதி கணேசதுரை, சங்கமித்தா ஜெயக்குமார், இ.புஷ்பா, பா.சிவதர்சன், பா.சிவானந்தி, சி.பத்சலா, த.சிவகுமாரன், மாலா மதிவதனன், செல்வநாயகம் கிருஷாந், வானதி காண்டீபன், ராஜி கெங்காதரன், தமிழினி பாலசுந்தரி, கந்தர்மடம் அ.அஜந்தன், பா.திவா, தமயந்தி கணேசானந்தன், கமலா கிருபானந்தன், இ.கருணாலட்சுமி, கௌசீதகி ஜசிதரன், மு. சதீஷ்பாலமுருகன், அ. நளாயினி, வாமதேவன் வலவன் ஆகிய 21 எழுத்தாளர்களது சிறுகதைகளே இந் நூலிற்கு அணிசேர்த்திருக்கும் ஏனைய படைப்புகளாகும்.

ஏற்கனவே இதழ்களில் எழுதி வரும் ஓர் சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் இவர்களுள் புதியவர்கள். அவர்களுக்கு இது தான் முதல் கதை என முன்னுரையிலும் கோகிலா குறிப்பிடுகிறார். ஆனாலும் ஓர் சிலவற்றைத் தவிர அநேகமானவற்றை அவ்வாறு கூறமுடியாதிருப்பதற்கு தொகுப்பாசிரியர் மேற்கொண்ட அதி சிரத்தையே காரணமெனலாம். ஏறத்தாழ சகல கதைகளிலும் சீர்மியமே அடிநாதமாய் ஒலிக்கின்றது.

ஆயினும் அவரவர் நுண்ணறிவு, கற்பனை வளம், மொழி ஆளுமையைப் பொறுத்து கதைகளின் தரமும் மாறுபட்டிருக்கிறது. சிவானந்தி (உண்மை உணரப்படும் வரை பொய்தான்), சிவகுமாரன் (தண்மை), வானதி (விலகும் மூட்டம்), கமலா (மாற்றம்), கருணாலட்சுமி (உறவுகள்) போன்றவர்களின் கதைகளில் ஆற்றுப்படுத்தலே அதிகாரப்பட்டு நிற்பினும் அவர்கள் சொல்ல வந்த செய்திகள் கவனத்தை ஈர்ப்பனவாய் அமைந்திருப்பது நோக்கற்பாலது. பிள்ளைகள் மீது எப்பொழுதும் அன்பை வெளிக்காட்ட வேண்டும் என வானதி தன் கதையினூடு சொல்ல வருவதனை இதற்கு உதாரணங் கொள்ளலாம்.

வெளிநாட்டுப் பணம் எம் மண்ணில் எத்தகையதான கலாசாரச் சீரழிவினை ஏற்படுத்துகிறது என்பதற்கு சங்கமித்தா கூறும் கதை(விழிப்பு) சாட்சி, இறுதியில் வாசகரை உறைய வைத்தாலும் உறைக்கும் படியாகவே சொல்லியிருக்கிறார்.

படிக்கும் வயதில் பிள்ளைகளைப் பெற்றோரிடமிருந்து பிரித்து விடாதீர்கள் என பார்வைகள் கதை மூலங் கூற முயலுகிறார் புஷ்பா, கருத்தும் அவரது கதையும் கவனத்திற்குரியதே! அமைதியாய், செழிப்பாய் இருந்த ஊர் எவ்வாறு மயானமானதென்பதை கிருஷாந் மனதைக் கௌவும் வண்ணம் கிராம லயம் கதையில் பதிவு செய்கிறார்.புகையிலை செய்கை பற்றி அவருக்குள்ள பிரக்ஞை பிரமிக்க வைக்கிறது!

சின்ன வயதில் பெற்றோரைப் பிரிந்து வாழ்ந்ததில் நிகழ்ந்த பாதிப்பினை நெரிஞ்சி முள் கதையில் வலு நேர்த்தியாகவே சித்திரித்திருக்கிறார் ராஜி கெங்காதரன்.

'பேரப் பிள்ளைகளுடன் ஒன்றாக வாழ முடியவில்லையே' என்றேங்குமிடம் மிக அற்புதமாய் அமைந்திருப்பதற்கும் அப்பால், எம் மண்ணில் வாழும் பெரும்பாலான முதியோர்களின் ஆதங்கத்துடன் ஒத்திசைகிறது! மதம், மொழி யாவற்றிற்கும் அப்பால் 'பெண்கள் நாம்' எனும் எண்ணத்தால் விளைந்த ஒத்துணர்வின் வலிமையை கந்தர்மடம் அஜந்தனின் ஒத்துணர்வு கதையில் தரிசிக்க முடிகிறது. ஆணொருவர் இதனை எழுதியிருப்பது கதை பெறும் மற்றுமொரு முக்கியத்துவம் எனலாம். நன்றாக வடிவம் பெற்றமைந்த ஓர் கதை இது!

இல்லாத ஒன்று தெரிவதாக தோன்றும் மனப் பிரமையினை திவா வெகு அழகாகவே மாயை கதையில் படம் பிடித்திருக்கிறார்.இவ் வகையில், பகற் கனவு காண்பதனை உயிர்ப்புடன் கூறி நிற்கும் தமயந்தியின் விருட்ச தேவதை கதையும் குறிப்பிடத்தக்கதொன்றே!

மன வடுவின் தாக்கத்தால் ஆறுதல் பெற ஒருங்கிணையும் சிவா மற்றும் ஒல்காவின் கதையைக் கூறும் சதீஷ்பாலமுருகனின் 'திருப்பமும்', அப்பாவின் ஆத்ம சாந்திக்காக தேடுவாரற்றுக் கிடந்த வீணையை மீண்டும் மீட்ட முயலும் மீராவின்கதையினைச் சொல்லும் நளாயினியின் 'வீணை' கதையும் ஏற்படுத்திய அதிர்வுகள் மிக்க வீச்சானவை!

தொகுதியில் கலையழகு பெற்று, வாசகரைத் திருப்திப்படுத்திய கதைகளென 'ஒத்துணர்வு' டன் பொருத்திப் பார்க்கத் தக்க மேலும் மூன்று கதைகளாக, (கோகிலா மகேந்திரனின் கதையைத் தவிர்த்து), மாலா மதிவதனனின் 'துளசி வேம்பு', கௌசீதகி ஜசிதரனின் 'விடியலைத் தேடி', வாமதேவன் வலவனின் 'வாழ்வும் வளமும்' ஆகியவற்றைக் கொள்ளலாம்.

'குடிப்பதற்காக' முற்றத்து வேப்ப மரத்தினை விற்க முயலும் தன் தந்தையிட மிருந்து அத் தெய்வீகத் தருவினைக்காக்க பிரயத்தனப்படும் துளசியின் கதையை கதாசிரியை மாலா வெகு இயல்பாகவே சொல்லியிருக்கிறார். கிராமிய வாழ்வின் அழகியல், தாத்தா முத்தப்பாவின் பிரிவுத்துயர் யாவும் கன கச்சிதமாகவே கதையில் காட்சிப் படுத்தப் பட்டிருப்பது மேலதிக சிறப்பு!

கௌசீதகியின் 'விடியலைத் தேடி' கணவனின் வீட்டில் கொத்தடிமையாக வாழப் பிடிக்காது அவசர அவசரமாக ஓட்டோ ஒன்றைப் பிடித்து ஊருக்கு வந்து சேரும் பிரசாந்தியின் கதை. பெண்ணின் மனவியல்பு, நுண்மையான சிந்தனைகள், சிக்கலான சூழ்நிலை, அவலங்கள் ஆகியவற்றை மிகத் துல்லியமாகவே சித்திரித்துள்ளார் கௌசீதகி.கதை கூறிய முறை கவனத்தை ஈர்க்க வைத்திருப்பதோடு, சிறுகதைக்கான உருவ அமைதியையும் முழுமையாகத் தரிசிக்க முடிகிறது!

'வெள்ளை நிற கார் வந்து வாசலில் நின்றது' என்பதோடு கதையை முடித்து விடுகிறார் கதாசிரியர்.

சாந்தி கணவனுடன் திரும்பினாளா என்பதை வாசகர் வசமாக்கிவிடுகிறார். கௌசீதகிக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதனை கட்டியம் கூறி நிற்கும் கதையிது!

இந் நூலினை தூக்கி நிறுத்தியிருக்கும் கதை என(கோகிலாவின் கதையைத் தவிர்த்து) சொல்லத்தக்க ஒரு கதை வாமதேவன் வலவனின் 'வாழ்வும் வாழும்'.

கதையின் கரு, கதை நிகழ் களம், பாத்திர வார்ப்புகள், சொல்லிய முறைமை யாவுமே புதியன,ஏனைய கதைகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டன!

கபூர், ஆஷியா என்ற வேறுபட்ட மதம்,மொழி சார்ந்த இரு பெரும் ஆளுமைகள் அந்நிய நாடொன்றில் தொழில் நிமிர்த்தம் சந்திக்கிறார்கள். அதன் போது நிகழும் நட்பு நிலை, தடுமாற்றங்கள், பின் காதலில் விழுதல் என வெகு சுவாரஸியமாகவே கதையை நகர்த்தி வாசகரையும் கதை நிகழ் களத்திற்கு அழைத்துச் சென்று விடுகிறார் வலவன். காதலர்கள் இணைய முற்படுகையில் ஆஷியா நாட்டு கலாசாரம் தடைபோடுகிறது. அதையும் மீறி அவர்கள் சேர முற்படுகையில் காபூர் விமான நிலையத்தில் வெடிகுண்டுத் தாக்குதலில் சிக்கண்டு மரணத்தை தழுவுகிறாள் ஆஷியா! அற்புதமான கதையொன்றினை வெகு அழகாகவே சொல்லியிருக்கிறார் வலவன்.

'ஒரு நல்ல சிறுகதையைப் படிக்கும் வாசகனுடைய சிந்தனையானது கதை முடிந்த பின்பும் சிறிது தூரம் ஓடவேண்டும்.சிறு கதையின் முழுமை அவன் சிந்தனை ஓட்டத்தில்தான் நிறைவேற வேண்டும். ஒரு உண்மையான சிறுகதை அது முடிந்த பிற்பாடுதான் தொடங்குகிறது!' என்பார் எனது அபிமான எழுத்தாளர் அ. முத்துலிங்கம். இங்கும் ஆஷியாவின் மறைவின் பின் அவளது இனிய நினைவுகளுடன் கபூரின் வாழ்வும் வாழும் எனக் கதையை முடித்திருக்கிறார் வலவன். இவரது இக் கதையைக் கூட முத்துலிங்கத்தின் சில கதைகளுடன் பொருத்திப்பார்க்க மனம் அவாவுகிறது!

ஏனைய கதைகள் பற்றியும் கூறுவதற்கு மனம் விரும்பினும் விரிவஞ்சித் தவிர்த்துள்ளேன்.

மொத்தத்தில் கோகிலா மகேந்திரனின் இம் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது! கதைகளை மீள எழுதச் செய்து, சிலவற்றில் சிறு திருத்தங்கள் செய்து, படி திருத்தி செவ்வை பார்த்து, அவர் செலவு செய்த நேரத்திற்கு தகுந்த பலன் கிடைத்திருக்கிறது என்றே சொல்லத்தோன்றுகிறது. இந் நூலால் கோகிலா மகேந்திரன் பெருமைப் படலாம்!

அக்கையாரே தொடரட்டும் உங்கள் பணி!

---

## மூவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஊக்குவிப்பு, கொள்கை உருவாக்கம், திட்டமிடல், சுற்றுலா, எரிசக்தி, விவசாயம், காணி, கால்நடைகள், நீர்வழங்கல், கடற்றொழில் அமைச்சுகள்*

*பிரதமர் ஹரிணி அமரசூரிய:*
*நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு, வர்த்தகம், வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி, சுகாதார அமைச்சுக்கள்.*

*அமைச்சர் விஜித ஹேரத்:*
*புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார நடவடிக்கைகள், தேசிய ஒருங்கிணைப்பு சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, வெளியுறவு அமைச்சு, சுற்றாடல், வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு, விவசாயம் மற்றும் உட்கட்டமைப்பு வசதி அமைச்சு , வீடமைப்பு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுகள்*

## அமைச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில், நேற்று (24) நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள இரு அமைச்சர்களின் கீழ் வரும் அமைச்சுக்களில் ஒரு அமைச்சுக்கு முஸ்லிம் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இதன்படி, சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.எம். நயிமுத்தீன் (நளீமி), வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இந்த அமைச்சு, பிரதமர் ஹறிணி அமரசூரியவின் கீழ் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# அமைச்சின் செயலாளராக நயீமுத்தீன்



**( ஐ. ஏ. காதிர் கான் )**

நாட்டின் புதிய பிரதமராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹறிணி அமரசூரிய இன்று (24) மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ள நிலையில், நேற்று (24) நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள இரு அமைச்சர்களின் கீழ் வரும் அமைச்சுக்களில் ஒரு அமைச்சுக்கு முஸ்லிம் ஒருவர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.எம். நயிமுத்தீன் (நளீமி), வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைச்சு, பிரதமர் ஹறிணி அமரசூரியவின் கீழ் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சஊதியின் 94 ஆவது தேசிய தினம்



அஸ்ஹர் ஆதம்

சஊதி அரேபியா தனது 94 ஆவது தேசிய தினம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

சஊதி அரேபியா ஒவ்வொருவருடமும் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி தன்னுடைய தேசிய தினத்தை மிகவும் ஆடம்பரத்துடன் விடுமுறை தினமாகப்பிரகடனப்படுத்தி கொண்டாடி வருகின்றது.

ஹெஜாஸ், நஜ்த், கிழக்கு அரேபியாவின் சில பகுதிகள் (அல்-அஹ்ஸா) மற்றும் தென் அரேபியா (“ஆசிர்) ஆகிய பகுதிகளை ஒன்றிணைத்து ஒரே மாநிலமாக சவூதி அரேபியாவின் இராச்சியம் 1932 ஆம் ஆண்டில் இப்னு சஊத் என்று அழைக்கப்பட்ட மன்னர் அப்துல் அஸீஸால் நிறுவப்பட்டது.

சஊதி அரேபியா பொது உள்ளீடு இல்லாமல் மன்னரால் நிர்வகிக்கப்படும் ஒரு முழுமையான முடியாட்சி நாடாக. இருந்து வருகின்றது.இதன் அடிப்படைச் சட்டத்தில், சஊதி அரேபியா தன்னை ஒரு இறையாண்மை கொண்ட அரபு இஸ்லாமிய நாடாகவும், இஸ்லாத்தை இதன் அதிகாரப்பூர்வ மதமாகவும், அரபியை இதன் அதிகாரப்பூர்வ மொழியாகவும் வரையகை செய்துள்ளது.

சஊதி அரேபியா அரேபிய தீபகற்பத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கியது சுமார் 2,150,000 கிமீ (830,000 சதுர மைல்) நிலப்பரப்பைக் கொண்டுள்ளது, இது ஆசியாவின் ஐந்தாவது பெரிய நாடாகவும், மத்திய கிழக்கில் மிகப்பெரிய நாடாகவும் உள்ளது. இது மேற்கில் செங்கடல் எல்லையாகவும் வடக்கே ஜோர்டான், ஈராக் மற்றும் குவைத் பாரசீக வளைகுடா, பஹ்ரைன், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கிழக்கே தென்கிழக்கில் ஓமான் மற்றும் தெற்கில் எமென். வடமேற்கில் உள்ள அகபா வளைகுடா சவூதி அரேபியாவை எகிப்து மற்றும் இஸ்ரேலில் இருந்து பிரிக்கிறது. செங்கடல் மற்றும் பாரசீக வளைகுடா இரண்டிலும் கடற்கரையைக் கொண்ட ஒரேயொரு நாடு சஊதி அரேபியா வாகும், இதன் நிலப்பரப்பின் பெரும்பகுதி வறண்ட பாலைவனம், தாழ்நிலம், புல்வெளி மற்றும் மலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தலைநகரம் மற்றும் பெரிய நகரமாக ரியாத் செயற்படுகின்றது முக்கிய நகரங்களில் ஜித்தா மற்றும் இஸ்லாத்தின் இரண்டு புனித நகரங்களான மக்கா மதீனா ஆகியவை அடங்கும். கிட்டத்தட்ட 32.2 மில்லியன் மக்கள்தொகையுடன் அரபு உலகில் நான்காவது அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக சஊதி அரேபியா கருதப்படுகின்றது.

சஊதி அரேபியா ஒரு பிராந்திய மற்றும் நடுத்தர சக்தியாக கருதப்படுகிறது. 1938 ல் நாட்டில் பெட்ரோலியம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் உற்பத்தி நாடாகவும் முன்னணி எண்ணெய் ஏற்றுமதியாளராகவும், உலகின் இரண்டாவது பெரிய எண்ணெய் இருப்பு நாடாகவும் மற்றும் ஆறாவது பெரிய எரிவாயு இருப்புக்களைக் கொண்ட நாடாகவும் கருதப்படுகின்றது. சஊதி அரேபியா உலக வங்கியின் உயர் வருமானப் பொருளாதார நாடாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது அத்துடன் ஜீ 20 முக்கிய பொருளாதாரங்களில் உள்ள ஒரேயொரு அரபு நாடாகவும் உள்ளதுடன் சஊதியின் பொருளாதாரம் மத்திய கிழக்கில் மிகவும் வலுவான நிலையிலும் உள்ளது.

சஊதி அரேபியா அதிகமான வெளிநாட்டுத் தொழிலாளர்களைச் சார்ந்திருப்பதால் உலகின் மூன்றாவது பெரிய புலம்பெயர்ந்த மக்கள்தொகையைக் கொண்டுள்ளது



இது வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் ஐக்கிய நாடுகள் சபை இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, அரபு லீக் மற்றும் OPECஒபெக் ஆகியவற்றிலும் உறுப்பு நாடாக உள்ளதுடன் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பிலும் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

சஊதி அரேபியா உலகின் முன்னணி நாடுகளோடு சகல துறைகளிலும் போட்டிபோடக்கூடியளவில் உள்ளது குறிப்பாக தொழில்நுட்பத்துறையில் பல மைல்கட்களைக்கடந்து விட்டது என்றே கூற வேண்டும்.பல புதிய நவீன கருவிகளையும் கண்டுபிடித்து அவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்தி வருகின்றது. சுற்றுலாத்துறையிலும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவர்ந்திழுத்து வருகின்றது.இதன் மூலம் பல மில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நியச்செலாவணியாகப்பெற்று வருகின்றது.நவீன உலகுடன் மோதும் வகையிலும் ஏனைய நாடுகளுக்கு சவால் விடுக்கும் வகையிலும் சஊதி அரேபியா முன்னெடுத்துள்ள விஷன் 2030 எனும் பாரிய வேலைத்திட்டம் ஏனைய உலக நாடுகளைக்கவர்ந்துள்ளதுடன் சஊதி அரேபியாவின் பக்கம் ஏனைய நாடுகளை வியப்புடன் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது.

சஊதி அரேபியாவின் விஷன் 2030 என்பது மக்களின் திறன்களை விருத்தி செய்யும் பன்முகப்படுத்தப்பட்ட, புதுமையான மற்றும் உலக அளவில் முன்னணி தேசத்தை உருவாக்கும் அல்லது மாற்றியமைக்கும் இலட்சியத் திட்டமாகக்கருதப்படுகின்றது.

துடிப்பான சமூகம், செழிப்பான பொருளாதாரம் மற்றும் இலட்சிய நாடு ஆகிய 3 முதன்மைக்கருப்பொருள்களை உள்ளடக்கியாதாக விஷன் 2030 கட்டமைக்கப்பட்டுள்ளது:

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தலைமையிலான பொருளாதார மற்றும் மேம்பாட்டு விவகார கவுன்சில் இந்த வரலாற்று வேலைத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

2016 ல் விஷன் 2030 தொடங்கப்பட்டதிலிருந்து சஊதி அரேபியா மாற்றத்தின் குறிப்பிடத்தக்க வெற்றிகளை காணத் தொடங்கியுள்ளது. நாட்டின் வளமான கலாசார பாரம்பரியம் மற்றும் மூலோபாய நன்மைகள் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றிய இந்த இலட்சியத் திட்டம், தேசத்தை மேலும் பலதரப்பட்ட மற்றும் புதுமையான பொருளாதாரத்தை நோக்கி வழிநடத்துகிறது.

மத்திய கிழக்கில் சஊதி அரேபியா தனக்கென ஒரு புதிய பாதையைத்தெரிவு செய்துள்ளது மட்டுமல்லாமல் உலகளாவிய அரங்கில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான அளவுகோல்களை நிறுவுகிறது. வேகமாக மாறிவரும் டிஜிடல் உலகில் சஊதி அரேபியா முன்னோடியாக உள்ளது.

தொலைநோக்கு 2030 எனும் திட்டமிடலின் மூலம் பொருளாதார சூழலை மேம்படுத்தவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் முதலீட்டாளர்களை கவரவும் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சஊதி மக்களை நாளைய நவீன் தொழில் நுட்ப உலகிற்கு ஏற்றால் போல் தயார்படுத்துகிறது, இது தொழில்நுட்பம் மற்றும் காலநிலை மாற்றம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, பொழுதுபோக்கு மற்றும் பிற முக்கிய தொழில்கள் போன்ற துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க உதவும் இதனால் சஊதி அரேபியாவின் கதவுகள் இப்போது உலகிற்கு இன்னும் பரந்த அளவில் திறக்கப்பட்டுள்ளன. இன்று நாட்டில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் , விஷன் 2030 டன் இணைந்ததாகவே இடம் பெற்று வருகின்றன

இவை அனைத்தும் விமர்சனங்கள் பலவற்றையும் தாண்டி பட்டத்து இளவசர் முகமது பின் சல்மான் மற்றும் அவரது வயதான தந்தையும் இரு புனித ப்ள்ளிவாயல்களின் பாதுகாவலருமான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல சஊத் ஆகியோரின் ஆசிர்வாதத்துடனும் ஆலோசனைகளின் பேரிலேயுமே இடம் பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது

இதே வேளை 2034 ஆம் ஆண்டில் உலகக்கின்ன கால்பந்தாட்டப்போட்டிகளை (FIFA 2034) நடாத்துவதற்கான சந்தர்ப்பம் சஊதி அரேபியாவுக்குக்கிட்டியுள்ளது. ரியாத் ஜித்தா அல்கோபர் அபா நியோம் கிங் அப்துல்லா எகனமிக் சிட்டி ஆகிய இடங்களில் மொத்தம் 15 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சஊதியின் விஷன் 2030 மற்றும் பீபா2034 ஆகிய இரு திட்டங்களின் மூலம் இலங்கையும் பாரிய. பொருளாதார நன்மைகளை அடைந்து கொள்ளவுள்ளது.

இதனால் பல்லயிரக்கணக்கான இளைஞர்கள் சஊதி அரேபியாவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.இதன் மூலம் நாட்டிற்குள் பாரிய தொகை அந்நியச் செலாவனியைக்கொண்டுவரமுடியும் இதன் மூலம் நமது நாடும் நன்மையடைவதோடு பல்லாயிரக்கணக்கான. குடும்பங்களும் நன்மையடையவுள்ளனர்.இவ்விரு நாடுகளுக்குமிடையில் மிக நீண்ட. காலமாக இராஜதந்திர உறவு மிகவும் உயர்ந்த.மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது. தற்போதைய சூழ் நிலையில் இரு நாட்டுக்குமிடையிலான நல்லுறவை மேலும் மேம்படுத்துவதில் சஊதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மிகவும் பாராட்டத்தக்கதும் மெச்சத்தக்கதாகவுமுள்ளது.

---

## தறை...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த நெருக்கடி ஏற்படும் என்பதே உண்மையாகும்.

அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் காசாவில் பள்ளி கட்டடத்தை குறி வைத்து நடத்திய தாக்குதலுக்கு எகிப்து கடுமையான கண்டனத்தை பதிவு செய்து உள்ளது. அதே சமயம் ஜோர்டான் கட்டுபாட்டில் இருக்கும் புனித அல் அக்ஸா பள்ளிவாசலை நீக்கி அல்லது அதன் வளாகத்தில் சியோனிச கோயில் கட்ட வேண்டும் என்று தற்போது ஒரு கும்பல் கூச்சல் போட முனைவது இந்த போரின் வீரியத்தை மேலும் சிக்கலான ஒரு நிலையை அடைய காரணமாக அமைந்து வருவதைக் நாம் புறந்தள்ளி விட முடியாது.

இந்த நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு வின் பைத்தியக்காரத்தனம் நிறைந்த போர் நடவடிக்கைகளை ஆதரிக்க விருப்பம் இல்லாத அமெரிக்கா நாசகார போர் கப்பல்கள் அமெரிக்கா திரும்பியதாக செய்திகள் வெளியாகியுள்ளன இதன் மூலம் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு தனது எதிர்ப்பை அமெரிக்கா பதிவு செய்து உள்ளது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

இஸ்ரேலிய நாட்டின் அரச தலைவரின் நாடு பிடிக்கும் ஆசை, போராளிகளை முழுமையாக ஒடுக்கி சியோனிசம் சார்ந்த கொள்கையை நிலை நிறுத்திக் கொள்ள அவர் எடுக்கும் முயற்சிகள் முழுமையாக தோல்வியை தழுவிய நிலையில் இஸ்ரேலிய நாடு மிகுந்த பொருளாதார ஸ்திரத்தன்மை அற்ற நிலையில் சென்று கொண்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

ஆழிவை நோக்கிய இஸ்ரேலிய ராணுவத்தின் அதர்ம படையெடுப்பை நடத்தி வரும் யூத ராணுவம் அவமானகரமான வீழ்ச்சியை சந்திக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதே நேரத்தில் மிகப் பெரிய அளவிலான பேரழிவுகள் அந்த நாட்டிற்கு விரைவில் ஏற்படும் என்பதே பல்வேறு சர்வதேச அரசியல் நிபுணர்கள் கணித்து வருவதையும் கூட நாம் புறக்கணித்து விட எந்தவொரு வாய்ப்பும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

## மனநலமும் ஆலோசனையும் 48

# நல்ல தலைவரும் நல்ல ஆட்சியும்

நாட்டின் அனைத்து சமூகங்களுடனும் உறவை சமநிலைப்படுத்துவதில் அரசியல் தலைமை முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

உண்மையான அரசியல் தலைவர்

தனது நாட்டையும்,

நாட்டு மக்களையும்,

நாட்டில் உள்ள கலாச்சாரங்களையும்

நாட்டு மக்களின் பாரம்பரியத்தையும் நேசிக்கவும் மதிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார். அதேபோல் நாட்டை முன்னேற்றுவதற்கு நேர்மையான முயற்சியை மேற்கொள்ள வேண்டியவராகவும் இருக்கிறார்.

உண்மையான அரசியல் தலைவர் தன்னை நாட்டின் தலைவராக,

நாட்டு வளங்களின் தலைவராக,

நாட்டு மக்களின் தலைவராக இருப்பதை ஏற்று அதை உணர்ந்து

மக்கள் உணர்வுகளை புரிந்து,

மக்கள் தேவைகளை தெரிந்து,

இனங்களின் தனித்துவத்தை மதித்து நல்லாட்சி செய்யும் பாதையில் பயணம் செய்யும் நல்ல மனிதராக இருக்க வேண்டியுள்ளார்.

மக்கள் நெஞ்சங்களுக்கு நெருக்கமானவராக தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டியும் இருக்கிறார்.

தனது நாட்டு மக்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களின் நல்வாழ்வுக்கு நேர்மையாக உழைக்கும் பணியாளராக தன்னை மாற்றி அமைக்க கடமைப்பட்டிருக்கிறார்.

இந்த பண்புகளை கொண்ட ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கு நமது அறிவைக் கொண்டு நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறோம்.

நன்கு பகுப்பாய்வு செய்து முடிவெடுக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும் எமக்கு கருணை காட்டி, நல்லாட்சியை வழங்கக்கூடிய தலைவரை ஏற்படுத்தித் தருமாறு ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஆட்சியாளன் வல்லவன் அல்லாஹ்விடம் நாம் பிரார்த்திக்கும் பொறுப்புக்கு உரியவர்களாகவும் இருக்கிறோம்.

யா அல்லாஹ் நம்மீது இரக்கப்படாத, நமது விடயத்தில் உன்னை அஞ்சாத ஆட்சியாளர்களை நம் மீது சாட்டிவிடாதே .

(நூல் : திர்மிதி 3502)

எவ்வளவு அழகான பிரார்த்தனை எமக்குக் கற்றுத் தரப்பட்டிருக்கிறது.

வாழ்க்கையை தந்த இறைவன்...

வாழ்க்கைக்கு வழிகாட்ட வாய்ப்புகளை தந்த இறைவன்...

வழிகாட்ட அதிகாரங்களை கொடுக்கின்ற இறைவன்..

கொடுக்கும் ஆட்சியை எடுக்கும் இறைவன்.. வளமான வாழ்க்கையை வேண்டி அவனிடம் உறுதியான உள்ளத்துடன் பிரார்த்திதனை செய்யவும் கற்றுத்தந்திருப்பது அவனது அளவு கடந்த கருணையின்

வெளிப்பாடாக இருக்கிறது.

அல்லாஹ்வை நம்பியவர்களாகவும்

அவனை சரணடைந்தவர்களாகவும்

எந்த முடிவையும் நல்ல முடிவாக ஏற்கும் பக்குவம் பெற்றவர்களாகவும்

நாம் இருப்பதால் பிரார்த்தனை மீது உயரிய நம்பிக்கை வைப்போம். மனம் திறந்து அவனை பிரார்த்தனை செய்வோம்.

நம் நாட்டுக்கு நல்ல தலைவர் கிடைக்கட்டும்..!

நம் நாட்டில் நல்ல ஆட்சி நிலவட்டும்..!

இன, மத பேதம் இல்லாத தலைவர்கள்

இந்த மண்ணில்

தளிர் விடட்டும்...!

யா அல்லாஹ் நம்மீது இரக்கப்படாத, நமது விடயத்தில் உன்னை அஞ்சாத ஆட்சியாளர்களை நம் மீது சாட்டிவிடாதே .

(நூல் : திர்மிதி 3502)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




# அரவணைக்கும் உள்ளம்

மதீனாவிலே உமைர் என்று ஒரு சிறுவன் இருந்தான் -

அவனிடம் நுகைர் என்று ஒரு சிட்டுக்குருவி இருந்தது. அதை ஆசையாய் வளர்த்து வந்தான்.. அந்த குருவியுடன் அவன் விளையாடுவது வழக்கமாக இருந்தது..

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவனை காணும் போது அவனது குருவி பற்றி விசாரிப்பார்கள்..

ஒரு முறை அவனை சந்திக்கும் போது அந்தச் சிறுவன் சோர்ந்து கவலையோடு இருப்பதை கண்டார்கள்.

அந்த குருவி இறந்துவிட்ட செய்தியை நபியவர்கள் அறிந்துகொள்கிறார்கள்..

“அன்பின் சிறுவனே உனது நுகைருக்கு என்னவாயிற்று” என்று தலையை தடவி அவனது சோகத்தை பகிர்ந்து கொள்கிறார்கள்..

ஒரு பேரரசர், மாவீரர் மற்றும் ஒரு சமூகத்தையே வழிநடத்தும் தலைவர் - பார்ப்பதற்கு ஆயிரம் வேலைகள் தலைக்கு மேலால் இருந்தபோதிலும் அந்தச் சிறுபிள்ளையின் உள்ளத்தை ஆற்றுப்படுத்த முனைந்தாரே எம் உத்தம நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவரை விடவா நீங்கள் டிரஎல?. இது என்ன சிறுபிள்ளைத்தனம் என்று எண்ணும் விடயங்களில் கூட எவ்வளவு மென்மையாக நடந்துகொண்டார் எம் நபி

எம் நபியை விடவா உங்கள் குழந்தைகளின் தலையை வருடி விட உங்களுக்கு நேரமில்லை???

குழந்தைகளை அரவணையுங்கள்.. அவர்களுக்கும் உள்ளம் என்று ஒன்று உள்ளதை உணர்ந்து கொள்ளுங்கள்..!

# குட்டிக்கதை: இல்லற இரகசியம்

ஒரு சாது மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

ஒரு பறவை அவரிடம் சென்று பேசியது.

‘ஐயா! உலகை சுற்றிப் பார்க்க ஆசைப்படுகிறேன். முதலில் ஆயிரம் காத தூரம் கடலில் பறந்து அழகான ஒரு தீவை பார்க்க விரும்புகிறேன்“, என்றது.

‘பறவையே! உன்னால் அவ்வளவு தூரம் கடலின் மேல் பறக்க முடியுமா?முயற்சிப்பதில் தவறில்லை.

ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்.

பிரயாணத்தின் போது முதல் முறையாக உனக்கு சோர்வு ஏற்படும் போது உடனடியாக புறப்பட்ட இடத்திற்கே திரும்பி விடு“, என்றார் சாது.

தலையசைத்து விட்டு பறந்தது பறவை.

பக்கத்தில் இருந்த சீடனிடம் பேசினார் சாது.

‘சீடனே! முதல் முறை சோர்வடையும் போது பாதி பலத்தை இழந்துவிட்டோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அப்போது திரும்பினால் மட்டுமே பத்திரமாக கரைக்குத் திரும்ப முடியும்“,என்றார் சாது.

ஒரு வாரத்திற்குப் பிறகு பறவை திரும்ப வந்தது.

‘ஐயா! கடலில் இருநூறு காத தூரத்தை அடைந்தவுடன், சோர்வடைந்தேன்.

நீங்கள் சொன்ன படி உடனே திரும்பிவிட்டேன்.

பயணத்தை தொடர்ந்திருந்தால், கடலில் விழுந்திருப்பேன்.

இருந்தாலும், சில நாட்களுக்குப் பிறகு என் முயற்சியை தொடர விரும்புகிறேன்“,என்றது பறவை.

‘பறவையே! இம்முறை உன் துணையையும் உடன் அழைத்துச் செல். பறக்கும் போது இரண்டாம் முறையாக சோர்வடைந்தவுடன், திரும்பி வா என்றார் சாது.

பதினைந்து நாட்கள் ஓடிப்போனது. மீண்டும் பறவைகள் திரும்ப வந்தன.

‘ஐயா! எங்களால் கடலில் நானூறு காத தூரம் தான் பறக்க முடிந்தது. நீங்கள் சொன்னபடி இரண்டாவது முறை சோர்வடைந்தவுடன் திரும்ப வந்துவிட்டோம்.

தொடர்ந்து பறந்திருந்தால் கடலில் விழுந்து இறந்திருப்போம். ஆனாலும் எங்கள் முயற்சியை தொடர விரும்புகிறோம். எங்களுக்கு உதவுங்கள்“, என்றது பறவை.

சாது யோசித்தார். கீழே கிடந்த ஒரு குச்சியை எடுத்து பறவையிடம் கொடுத்தார்.

‘பறவைகளே! பயணத்தின் போது இந்தக் குச்சியை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.

சோர்வு ஏற்படும் போது, இந்தக் குச்சியை கடல் தண்ணீரின் மீது போடுங்கள்.

அது மிதக்கும்.



அந்தக் குச்சியின் மீது அமர்ந்து ஓய்வெடுங்கள்.

களைப்பு தீர்ந்தவுடன் மீண்டும் குச்சியோடு பறந்து செல்லுங்கள்“, என்றார் சாது.

பறவைகள் நன்றி சொல்லிவிட்டு பறந்தன. இரண்டு மாதங்களுக்குப் பிறகு சாதுவிடம் வந்தன.

‘ஐயா! உங்களின் ஆசியினால், ஆயிரம் காத தூரத்திற்கு அப்பால் உள்ள தீவை சுற்றிப் பார்த்தோம்.

குச்சியின் உதவியால் சோர்வடையும் போதெல்லாம் ஓய்வெடுத்தோம்“, என்றது பறவை.

‘பறவைகளே அருமை! நீங்கள் எடுத்துச் சென்ற குச்சி உங்களுக்கு சுமையாக இல்லையா?“என்று கேட்டார் சாது.

பறவை பேசியது.

‘ஐயா! சில நாட்கள் குச்சியை தனித்தனியே சுமந்து பறந்தோம். சில இடங்களில் சேர்ந்தே சுமந்தோம்.

அப்போதெல்லாம் அது எங்களுக்கு சுமையாகவே இருந்தது. பல இடங்களில் எங்களுக்குள்ளே சண்டையும் வந்தது.

ஆனால், கடலில் குச்சியை போட்டு அதில் நாங்கள் ஓய்வெடுக்கும் போதுதான் “குச்சியை நாங்கள் சுமக்கவில்லை. குச்சிதான் எங்களை சுமக்கிறது, காப்பாற்றுகிறது”, என்ற உண்மை புரிந்தது“, என்று சொல்லி விட்டு பறந்தது பறவை.

சாதுவைப் பார்த்தான் சீடன். சாது பேசினார்.

‘சீடனே! பறவை முதலில் தனியாக பறந்த போது எளிதில் சோர்வடைந்தது.

துணையோடு பறந்த போது அதிக நேரம் சோர்வடையாமல் பறக்க முடிந்தது. அதற்குக் காரணம் ‘துணை“.

ஆனாலும் இலக்கை அடைய முடியவில்லை.

இலக்கை அடைய ‘குச்சி“ என்ற கருவி அவசியமாகிறது.

அந்தக் கருவி ஓய்வைக் கொடுத்தது, சண்டையைக் கொடுத்தது, பல நேரங்களில் சுமையாகத் தெரிந்தது.

ஆனால், அந்தக் கருவியின் உதவியால் மட்டுமே இலக்கை அடைய முடிந்தது.

பறவைகளுக்கு ‘குச்சியை“ப் போல மனிதர்களுக்கு ‘இல்லறம்“ கருவியாகிறது.

‘சம்சார சாகரம்“, என்ற பிறவிக் கடலை கடக்க, கடலில் குதிக்க வேண்டியதில்லை, நீந்த வேண்டியதில்லை.

‘இல்லறம்“ என்ற குச்சியின் உதவியால் மிதந்தே கடக்கலாம்“, என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் சாது.

குச்சியை சுமப்பதாக பறவைகள் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினாலும், ‘குச்சியே பறவைகளை சுமக்கிறது“.

இதைப் போல, கணவனும், மனைவியும் இல்லறத்தை வழி நடத்துவதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினாலும், உண்மையில் இல்லறமே அவர்களை வழி நடத்துகிறது.

இதுவே இல்லற ரகசியம்...